# C.S.I TAMIL CHURCH - OMAN

# "பாலைவன மன்னா"




**மன்னா – 11** ஜனவரி 2021 **பிரதி – 10**



# ஆயர் மடல்



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

வாழ்க்கை பயணத்தில் மேலும் ஒரு ஆண்டை காணச் செய்த கர்த்தாதி கர்த்தரை துதிப்போம். கடந்து வந்த பாதைகளின் கடினம் நமக்கு மட்டுமல்ல அகில உலகத்திற்கே அறிமுகமான ஒன்று.

**"உன்னை காக்கும்படிக்கு நான் உன்னுடனே இருக்கிறேன்"** என்று எரேமியா 1:8-ன் படி வாக்குத்தத்தம் தந்த கர்த்தர் 2020-ல் நம்மை காத்துக்கொண்டார்.

2021-ம் ஆண்டு வாக்குத்தத்தத்தின்படி புதிய ஆண்டில் **"நான் உங்கள் பட்சத்திலிருந்து, உங்களை கண்ணோக்குவேன்"** எசேக்கியல் 36:9-ன்படி நம் பட்சத்திலிருந்து நம்மை கண்ணோக்கி வழிநடத்த வேண்டும் என்ற வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் புத்தாண்டை தொடருவோம்.

புதிய ஆண்டின் தொழுகை துவங்கவும் தொடர்ந்து பங்குபெற்று இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் ஆயத்தப்படுவோம்.

புதிய மரபணு மாற்றம் கொண்ட வைரஸ் பரவல் முற்றிலுமாக நீக்கப்பட ஜெபிப்போம் நமது ஜெபங்களில் இந்திய தேசத்தின் தேர்தலை குறிப்பாக தமிழ்நாட்டின் தேர்தலை நினைவு கூருவோம்.

2021-ம் ஆண்டில் நாட்டின் பொருளாதார நிலை சீரடையவும் வேலை வாய்ப்புகள் பெருகவும், விவசாயிகளின் போராட்டங்கள் நலமான முடிவுகள் ஏற்படவும், விபத்துகள், இயற்கையின் பாதிப்புகள் ஏற்படாவண்ணம் இறையருளால் காக்கப்படவும் ஜெபிப்போம்.

நமது திருச்சபை, நமது திருச்சபை ஊழியங்கள், சங்கங்கள், குடும்பங்கள், நன்மைகளை நினைவுகூர்ந்து ஜெபத்தோடு புத்தாண்டில் பிரவேசித்து இறை வழிநடத்துதலை நிறைவாய் பெற்றுக்கொள்ள ஆண்டவராகிய கர்த்தர் உங்களை வழிநடத்துவாராக. ஆமென்.

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

# ஆயர் அருளுரை

கிறிஸ்து இயேசுவின் திருப்பெயரில் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் புதிய ஆண்டுக்கு நம்மை வழிநடத்தி வந்த கர்த்தரை நன்றியோடு துதிப்போம்.

இந்த ஆண்டு வாக்குத்தத்த செய்திக்கான வசனம் எசேக்கியேல் 36:9 **நான் உங்கள் பட்சத்திலிருந்து, உங்களைக் கண்ணோக்குவேன்.**




வாழ்க்கைப் பாதையில் பல மனிதர்களை நாம் சந்திக்கின்றோம். அதில் சில மனிதர்கள் உள்ளத்தில் எப்போதும் நம்மை விட்டு நீங்காத இடம் பெறுகிறார்கள். இதற்கு காரணம் நேர்மறையான தாக்கமாகவோ அல்லது எதிர்மறையான தாக்கமாகவோ இருக்கலாம். இதில் நேர்மறையான தாக்கம் கொண்ட நபர்கள் நம்மை அறிந்தவர்களாக நம்மால் அறியப்பட்டவர்களாக இருப்பார்கள். இப்படியே நம்மை உருவாக்கி உலகில் வாழ வைத்திருக்கும் ஆண்டவர் நம்மை பார்த்து **“நான் உங்கள் பட்சத்திலிருந்து, உங்களை கண்ணோக்குவேன்”** என்று சொல்கிறார்.

## அறிந்திருக்கும் ஆண்டவர்:-

ஆண்டவர் நம் பட்சத்திலிருந்து நம்மை கண்ணோக்க வேண்டுமாயின் நம்மை தெளிவாக அறிந்திருக்க வேண்டும். ஆயன் தன் ஆடுகளை அறிந்திருப்பதுபோல ஆண்டவர் நம்மை அறிந்திருக்கிறார். யோவான் 10:15(a) **“நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டும் இருக்கிறேன்”**. நாம் ஆண்டவருடைய ஆடுகளாய் இருக்கும் போது ஆண்டவரால் அறியப் பட்டிருப்போம். எசேக்கியேல் 34:16-ல் ஆயன் ஆடுகளை அறிந்திருக்கும் விதம் கூறப்படுகிறது. **“காணாமல் போனதை தேடி துரத்துண்டதை திரும்பக் கொண்டு வந்து எலும்பு முறிந்ததை காயம் கட்டி நசல் கொண்டதை திடப்படுத்துவேன்”.**



ஆடுகளின் தன்மையையும், இருப்பிடத்தையும், நிலைகளையும் அறிந்திருக்கும் ஆண்டவர் நம் பட்சத்திலிருந்து நம்மை கண்ணோக்குவேன் என வாக்கு தருகிறார். எனவேதான் 1சாமுவேல் 16:7-ல் கர்த்தர் சாமுவேலிடம் “இவனுடைய முகத்தையும் இவனுடைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம். நான் இவனை புறக்கணித்தேன். மனுஷன் பார்கிறபடி நான் பாரேன். மனுஷன் முகத்தை பார்ப்பான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்” என்றார்.

பிரியமானவர்களே நாம் கர்த்தரால் அறியப்பட்டிருக்கிறோம். எனவேதான் கடந்து வந்த பாதைகளில் கடின அனுபவம் வந்த போதும் நம்மை அறிந்து கரம்பற்றி நடத்தி புதிய ஆண்டில் காலடி எடுத்து வைக்க கிருபை செய்திருக்கிறார்.

## அறியப்பட்டிருக்கும் ஆண்டவர்:-

**“நான் என்னுடையவைகளால் அறியப்பட்டும் இருக்கிறேன்.”** யோவான் 10:15.


**“ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியால் அவனுக்குப்பின் செல்லுகிறது”** யோவான் 10:4

ஆயனுடைய சத்தத்தை அறிந்து பின் செல்லும் ஆடுகள் ஆயனால் பட்சமாய் கண்ணோக்கப்படுகிறது.

“கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்” இது சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானின் வேண்டல். கேட்கிறேன் என்னும் வார்த்தை கீழ்படிந்து செய்கிறேன் என்னும் பொருள்ப்படுகிறது.

ஆண்டவரை அறிந்து அவர் சத்தம் கேட்டு அவர் சித்தம் செய்வதே நம்மிடத்தில் ஆண்டவர் விரும்பும் ஒன்று.

சங்கீதம் 56:9 **“தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்”** என சங்கீதக்காரன் தாவீது குறிப்பிடுகிறார் பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது **“நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்”** 2தீமோத்தேயு 1:12 என்று குறிப்பிடுகிறார்.



நாம் நம் ஆண்டவரைக் குறித்து அறிந்திருக்க வேண்டும். திருமறைப்பள்ளி, திருமறை தியானம், திருமறை படித்தல் மூலம் அறிவினால் ஆண்டவரை அறிகிறோம். சாட்சிகள், அனுபவங்கள், இவைகள் ஆண்டவரை அனுபவித்து அறியச் செய்கிறது. இவைகளின் அடுத்த படிநிலையே ஆண்டவரோடு நம்மை நடக்கச் செய்கிறது என்று கூற முடியும்.

எனவேதான் யோசுவா பக்தன் அறிந்து, அனுபவித்து ஆண்டவரை பற்றிக்கொண்ட போது யோசுவா 24-ல் **"நீங்கள் கர்த்தருக்கு பயந்து, அவரை உத்தமமும் உண்மையுமாய் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு கர்த்தரை சேவியுங்கள். நானும் என் வீட்டாருமோ என்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்"**.

நாம் கர்த்தரை அறிந்து, அனுபவித்து, ஆராதிக்கும்போது கர்த்தர் நம் பட்சத்திலிருந்து நம்மை கண்ணோக்குவார்.

இப்புதிய ஆண்டு முழுதும் நம்மை ஆண்டவர் நம் பட்சத்திலிருந்து கண்ணோக்கவேண்டும் என்னும் ஜெபத்தோடும் வேண்டுதலோடும் அற்பணத்தோடும் செயல்படுவோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**அன்புடன் போதகர்**
**Rev. Dr. N. ஜெசின்**




# வாசகர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

## "ஒருவரின் உருவத்தை வைத்து...!"

எப்போதும் நாம் ஒரு பொருளை அல்லது மனிதர்களின் உருவத்தை வைத்தே எடை போடுகிறோம். அது மிகவும் தவறானது. ஒருவரின் உடலையோ, அவர் அணிந்திருக்கும் உடையை வைத்தோ எடை போடக்கூடாது. அவருடைய செயலைக் கொண்டே தீர்மானிக்க வேண்டும். அவர் உருவத்தை வைத்து அல்ல.

ஒரு அழகான பெண், ஒரு விமானத்தில் ஏறினார். தனது இருக்கையை தேடிச்சென்றபோது. தனக்கு ஒதுக்கிய இருக்கைக்கு அடுத்த இருக்கையில் இரண்டு கையையும் இழந்த ஒருவர் அமர்ந்திருந்தார். அவரைக் கண்டதும் அந்தப் பெண்ணுக்கு அருவருப்பாக இருந்திருக்கிறது. இந்த நபர் அருகில் நாம் எப்படி அமர்ந்து பல மணிநேரம் பயணம் செய்வது? என்று தயங்கிய அந்தப்பெண், விமான பணிப்பெண்ணை அழைத்து, எனக்கு வேறு இடத்தில் இருக்கைக்கு ஏற்பாடு செய்யுங்கள் எனக்கேட்டார். அதற்கு விமான பணிப்பெண்,"ஏன் உங்களுக்குத்தான் இருக்கை ஏற்கனவே ஒதுக்கி இருக்கிறதே" என்றார். அதற்கு அந்தப்பெண்,"எனக்கு அவர் அருகில் அமர்ந்து பயணிக்க அருவருப்பாக இருக்கிறது. அதனால்தான் வேறு இருக்கை கேட்டேன் என்றார்.

விமான பணிப்பெண் அதிர்ச்சியடைந்தார். காண்பதற்கு நல்ல படித்தவர் போல இருக்கிறார்கள். ஆனால்! கொஞ்சம் கூட நாகரிகம் இல்லாமல் பேசுகிறார்களே என்றெண்ணினார். அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், சற்றுநேரம் பொறுங்கள், நான் போய் வேறு இருக்கை இருக்கின்றதா? என்று பார்த்து வருகிறேன் என்று கூறிச்சென்றார். சற்று நேரத்தில் திரும்பி வந்து, "நீங்கள் எடுத்திருக்கும் பயணச்சீட்டு வணிக வகுப்பு (எக்கானமிக் கிளாஸ்) ஆனால்! எக்கானமிக் க்ளாசில் உங்களுக்கு ஒதுக்குவதற்கு வேறு இடமில்லை. முதல் வகுப்புப் பிரிவில் மட்டும்தான் ஒரு இருக்கை இருக்கிறது. ஆனாலும் நீங்கள் எங்களது மதிப்பு வாய்ந்த பயணி. உங்களது கோரிக்கையையும் ஆய்ந்தறியாமல் நாங்கள் இருக்க முடியாது. அதனால், எங்கள் பயண வரலாற்றிலேயே முதல் முறையாக ஒரு வணிக வகுப்புப் (எக்கானமி கிளாஸ்) பயணி ஒருவருக்கு முதல் வகுப்பு இருக்கையில் ஒதுக்குகின்றோம் சற்று பொறுமையாக இருங்கள்" என்று கூறியதும் அந்தப் பெண்மணிக்கு மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. விமானப் பணிப்பெண்ணின் பதிலுக்குக் கூட காத்திருக்காமல், முதல் வகுப்பிற்கு

செல்லத் தயாரானார்கள். ஆனால் அங்கு நடந்தது வேறு, விமான பணிப்பெண் நேராக அந்த இரண்டு கைகளையும் இழந்தவரிடம் சென்று,“அய்யா! தயவுசெய்து மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களது பயணப் பொருட்களை எல்லாம் நான் எடுத்துக் கொண்டு வருகிறேன்” நீங்கள் முதல் வகுப்பிற்கு வாருங்கள், உங்கள் அருகில் இவர்களைப் போல ஒருவரை அமர வைக்க எங்களுக்கு மனமில்லை” என்று பணிவாகக் கூறியதும், விமானத்தில் இருந்த அனைவரும் கைகளைத் தட்டி ஆரவாரம் செய்து அந்த முடிவை மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள்.

அந்தக் கைகளை இழந்தவர் எழுந்து,“நான் ஒரு பணி ஓய்வு பெற்ற இராணுவ வீரன், போரில் என்னுடைய இரண்டு கைகளையும் இழந்து விட்டேன், முதல் முறையாக இந்தப் பெண் கூறியதைக் கேட்டதும், இவர்களைப்போல உள்ளவர்களுக்காகவா இரவென்றும், பகலென்றும் பாராமல் பல இன்னல்களுக்கு இடையில் போரில் ஈடுபட்டோம் என்று நினைத்து மிக வருத்தமாக இருந்தது. ஆனால் இப்போது நீங்கள் எல்லாரும் கைதட்டி ஆராவாரம் செய்வதைப் பார்த்த போது மனசுக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கிறது மற்றும் உங்களைப் போன்ற நல்ல குடிமக்களுக்காக நான் கைகளை இழந்ததிற்காக மகிழ்ச்சி அடைகிறேன்” என்று கூறியபடி, முதல் வகுப்பை நோக்கி மெதுவாக நடக்க ஆரம்பித்தார்.அந்தப் பெண்மணியோ அவமானத்தின் உச்சிக்கே சென்று விட்டார். யாரையும் ஏறிட்டுப் பார்க்கும் திறனின்றி தலையைக் குனிந்து உட்கார்ந்து விட்டார்.

ஆம் நண்பர்களே!நாம் எப்போதும் அடுத்தவர்களைப் பற்றி எடை போட்ட வண்ணம் இருக்கிறோம். நம்மையும் பிறர் எடை போடுவார்கள் என்பதை நினைத்துப் பார்ப்பதில்லை.

நம்மைப்போல்தான் மற்றவர்களும் பிறர் மீது நல்ல எண்ணமோ, கெட்ட எண்ணமோ கொண்டு இருப்பார்கள் என்று நாம் நினைத்துப் பார்ப்பது இல்லை.

அழகு என்பது உருவத்தில் தீர்மானிக்கப்படுவதில்லை. ஒருவரின் குணமும், அவரது செயலும்தான் அவர் எப்படிப்பட்டவர் என்று தீர்மானிக்கிறது.

அழகு என்பது நாம் பார்க்கின்ற வெளித்தோற்றத்தில் இல்லை. அது மனம் தொடர்புடையது. அது நம் நடத்தையில் தான் வெளிப்படும். அதை உணர்ந்து நடப்பதற்கு முயற்சி செய்வோம்.

**அன்புடன் போதகர்**

## நம்பிக்கையோடிருங்கள்

அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்களை கூறி நம்பிக்கையின் செய்தியை பகிர்கிறேன். **“திடமனதாயிருங்களென்று இப்பொழுது உங்களுக்கு தைரியம் சொல்கிறேன்”** அப். 27:22

வாழ்வின் அனுபவங்கள் நமதுவாழ்வில் தைரியத்தை இழக்கப் பண்ணுகிறது. ஆனால் ஆண்டவர் இந்த ஆண்டில் நாம் தைரியமாய் வாழ அழைக்கிறார். பவுல் அப்போஸ்தலன் கடல் பயணத்தில் மக்களை தைரியப்படுத்திய திருவார்த்தைகள்தான் இவைகள்.

### துணிவோடிருங்கள் (திடமனதாயிருங்கள்)



யானையின் பலம் தும்பிக்கையில், மனிதனின் பலம் நம்பிக்கையில் இது ஓர் முதுமொழி. நமது வாழ்வில் நம்பிக்கை இல்லை எனில் வாழ இயலாது என்பதுதான் உண்மை. இருவர் படகில் மீன் பிடிப்பதற்காக கடலில் பயணம் மேற்கொண்டனர். அப்பொழுது எதிர்காற்று வீச படகு உடைந்து விடுகிறது. கையில் கிடைத்த பொருட்களைப் பிடித்துக் கொண்டு கரைக்கு நீந்த துவங்குகின்றனர். அவர்களில் ஒருவன் எல்லாம் தெரிந்தவனைப்போல் நம்பிக்கையற்று இருந்தவனிடம் 2 கடல்மைல் தூரமே கரை உள்ளது என துணிவை ஏற்படுத்தி நீந்த உற்சாகப்படுத்துகிறான். மதியம் முதல் மாலை வரை நீந்தி கடல் கரையை அடைந்த பின்புதான் அவர்கள் 25 மைல் தூரத்துக்கு அதிகமாக நீச்சல் செய்திருக்கிறார்கள் என புரிந்தார்கள்.

வாழ்க்கைப் பயணத்தில் பவுலடியாருக்கு வந்த துன்பம் போல வரும் துன்பங்களுக்கு எபேசியர் 2:13 கூறுவதுபோல **“முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானார்கள்”.** கிறிஸ்துவை அண்டிக்கொள்வோம். கிறிஸ்துவுக்குள் துணிவு பெறுவோம்.

## இறை நம்பிக்கையோடிருங்கள்

இவ்வுலகில் சிலர் பணத்தின் மீது நம்பிக்கைக் கொண்டுள்ளனர். சிலர் பதவி, படிப்பு, உறவு, உடைமை, சொத்து, பிள்ளைகள், என பல நிலைகளில் நம்பிக்கையுடையோர் உண்டு. ஆனால் வாழ்க்கைப் பயணத்தில் இவைகள் எல்லாம் நமக்கு உண்மையாக உதவுவன அல்ல.



பவுல் அப்போஸ்தலன் கப்பல் பயணத்தில் பொருட்களையெல்லாம் கடலில் வீச கூறிவிட்டு நம்பிக்கையை கடவுள் மீது வைக்க மக்களை திடப்படுத்திய அனுபவமே நமக்கு சொல்லப்படுகிறது. லூக்கா 15-ம் அதிகாரத்தில் நண்பர்கள் மீதும், ஆஸ்திகள் மீதும் நம்பிக்கை கொண்டிருந்த இளைய குமாரனின் இறுதிநிலை இழி நிலையையே கொண்டு வந்தது. தந்தையின் அன்பையும் ஆதரவையும் உணர்ந்து நம்பிக்கை உடையவனாய் தந்தையிடம் திருப்பிய நம்பிக்கையே மீண்டும் உயர்வை தந்தது.

நமது வாழ்வில் புத்தாண்டில் நாம் கொள்ளும் நல் நம்பிக்கையும் நல்லெண்ணமும் நல் எதிர்பார்ப்பும் நல்லதுதான். எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தர் மேல் உள்ள பற்றுறுதியின் ஆழத்தை அதிகப்படுத்திக் கொள்வோம். ஆண்டவரின் வழிகாட்டுதலை உணர்வோம். திடமனதாயும், இறை நம்பிக்கை உடையவர்களாயும் நம்மை உருவாக்கிக் கொள்ளுவோம்.

அசையாத உறுதி உடைய வேர்களை உடைய மரங்களே மழையிலும் காற்றிலும் அடிபட்டாலும் சாய்வது இல்லை. இப்படிப்பட்ட உறுதியில் வளர ஆண்டவர் உதவி செய்வாராக. ஆமென்.

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## அர்ப்பணிப்பில்தான் ஆனந்தம் உள்ளது



மண்ணில் : 03.01.1840
விண்ணில் : 15.04.1889
ஊர் : திரமெலு
நாடு : பெல்ஜியம்
தரிசன பூமி : மொலாக்காய் தீவு

பசிபிக் மகா சமுத்திரத்தில் ஹவாய் தீவுகள் கூட்டம். அதில் மொலாக்காய் என்பது சிறு தீவு. தென் பசிபிக் தீவில் தொழுநோய் பரவியபோது, தொழுநோயாளிகள் இத்தீவில்தான் தனிமையில் போடப்பட்டனர். அவர்கள் கவனிப்பாரற்று தங்கள் வாழ்வை இழந்தனர்.

மக்களால் கைவிடப்பட்டவர்கள், தாங்கள் கடவுளாலும் கைவிடப்பட்டோம் என்ற முடிவுக்கு வந்தனர். அவர்களுக்கு உதவி செய்யவும், அந்த தொழுநோயிலிருந்து அவர்களைக் காப்பாற்றவும் எவரும் முன்வரவில்லை. ஏனெனில் அத்தீவிற்குச் சென்றவர்கள் மீண்டும் தங்கள் நாட்டிற்கு வரக்கூடாது என்பது அரசாங்கக் கட்டளை.

1873ம் ஆண்டு துன்பத்தில் உழலும் மக்களுக்குத் துணைவனாக, துயர் துடைக்கும் நண்பனாக அம்மக்களைத் தேடிப் புறப்பட்டார் ஓர் இளைஞர். அவர்தான் **ஜோசப் டி வெஸ்டர்** என்ற இயற்பெயர் கொண்ட **டாமியன்**. பலர் டாமியனைத் தடுத்தனர். ஆனால் டாமியனோ தன் தீர்மானத்தில் உறுதியானார். மொலாக்காய் தீவில் இறங்கிய உடன் அங்கு அவர் கண்ட காட்சிகளோ கொடூரங்கள்!

வாழ்வில் நம்பிக்கையில்லாமல் நடைப் பிணங்களாக, வியாதியின் கொடுமையினால் தாக்குண்டு, உடலெல்லாம் புண்களாக, சீழ் வடிந்த நிலையில் வாழ்ந்த மக்களுக்கு வாழ்வின் நம்பிக்கையைக் கொடுத்தார். வீதியில் அலைந்த மக்களுக்கு வீடுகள், மருத்துவமனைகள் கட்டினார். துன்பத்தில் அவர்களின் துணைவரானார்.

ஓர் நாள் தன் உடலில் கொதிநீர் பட்டபோது உணர்ச்சியற்ற நிலையைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அந்தோ! தொழுநோயாளிகளின் நண்பனுக்கு தொழுநோய் தொற்றிக்கொண்டது. அன்று ஞாயிறு ஆராதனையில் “தொழுநோயாளியாகிய நம்மேல் கடவுள் அன்பாயிருக்கிறார்” என்று ஆண்டவரைப் புகழ்ந்தார்.

நோயின் கொடூரம் அவரை முற்றிலும் தாக்கவே 12 ஆண்டுகளாகத் தான் அன்பு பாராட்டி வந்த மக்களை விட்டு அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்தார். மக்கள் தங்கள் நண்பரை இழந்தனர்.

அர்ப்பணிப்பில் ஆனந்தம் கண்ட தந்தை டாமியன் ஜனவரி 3ல் 1840ம் ஆண்டு பிறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** நான் உங்களில் ஒருவனாக இதுவரை இல்லாமல் இருந்தேன். இப்பொழுதோ உங்களில் ஒருவனாக ஆகிவிட்டேன். - டாமியன்

**குயவனின் கரங்களில்:-** இறைவா! டாமியனைப் போன்று, அர்ப்பணிப்புள்ள இருதயத்தை எனக்குத் தாரும்.

**தியானத்திற்கு:- ஆதி. 5-6, சங் 6-8, மத். 5**

## நிகழ்வும் பாடமும்

- வெறுங்கையாகும் அளவிற்கு தர்மம் செய்யாதீர்கள்!
- முகம் சிவக்கும் அளவிற்கு கோபம் கொள்ளாதீர்கள்!
- குறுக்கு வழிக்குப் போகும் அளவிற்கு பொறாமையை வளர்க்காதீர்கள்!
- மனம் வலிக்கும் அளவிற்கு வார்த்தையை விடாதீர்கள்!
- அடிமையாகும் அளவிற்கு அன்பை செலுத்தாதீர்கள்!
- சண்டை உண்டாகும் அளவிற்கு விவாதத்தை தொடராதீர்கள்!
- அமைதியை கெடுக்கும் அளவிற்கு ஆசையை சேர்க்காதீர்கள்!
- பழிவாங்கும் அளவிற்குப் பகையை வளர்க்காதீர்கள்!
- மனம் வெறுக்கும் அளவிற்கு செயல்கள் செய்யாதீர்கள்!
- கண்ணீர் வடியும் அளவிற்கு கவலைப்படாதீர்கள்!
- நீங்கள் அடைவதெல்லாம் இறைவன் தந்த பரிசு!
- நீங்கள் இழப்பதெல்லாம் மற்றவருக்கு தரும் வாய்ப்பு!
- நேரங்கள் நேர்மையானவை, அதனால்தான் அவை யாருக்கும் காத்திருப்பதில்லை!
- ஏழையின் வீட்டில் பசிதான் நோய்க்கு காரணம்! பணக்காரன் வீட்டில் உணவுதான் நோய்க்கு காரணம்!

## 1. தூரக்காட்சியும் தூய உலகும்

**“நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன் முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை, மனதிலே தோன்றுவதும் இல்லை”.** ஏசாயா 65:17

திருச்சபையின் வரலாற்றிலும் மறக்க முடியாத சில நாட்கள் உள்ளன. இந்த சிறப்பு நாட்கள் நினைவுகூரப்படும் போதெல்லாம் அந்த நாளுக்குப் பின் நீண்டதோர் வரலாறு இருப்பதை நாம் அறியலாம். அந்த வரலாற்றுள் துன்ப, இன்ப நினைவுகளிருக்கலாம். திருச்சபை இப்பேற்பட்ட நாட்களை ஆசரிக்கும் போதெல்லாம் கடந்தவற்றை எண்ணி பார்ப்பதும் கடவுளின் திருச்செயல்களுக்காய் நன்றி செலுத்துவதும் மக்களின் தலையாய கடமையாகும், இன்றும் இறைவனின் கருணைப் பார்வை இச்சமூகத்தை மகிழ்விக்கிறது.

மானுட வீழ்ச்சியைக் கண்டு மன வேதனைப்படும் இறைவன், படைப்புகளையும் மானுடத்தையும் நலிவுகள் நீக்கி, புதுமையாக்க துடிக்கிறார். இந்த மாற்றுருவாக்கச்செயல் மானுடம் என்றென்றும் மகிழ்ந்திருக்கவும், களிகூரவும் இறைவனால் செய்யப்படுகிறது. இறைவன் அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமுமில்லாத உலகையே படைக்க விரும்புகிறார். தாங்கள் கட்டிய வீடுகளில் கட்டியவர்களே குடியிருக்கும் மகிழ்ச்சி நிறைந்த சூழலும், தாங்கள் நாட்டிய திராட்சைத் தோட்டத்தின் கனிகளை தாங்கள் புசிக்கும் சூழலையும் இறைவன் விரும்புகிறார். பெற்றோர் பிள்ளைகளோடு கூடி இன்புற்றிருக்கும் குடும்பமே அவரது எதிர்பார்ப்பு. நமது எதிர் பார்ப்புகளை எண்ணிப் பார்ப்போம். தூயவர்கள் அகக்கண்களால் தூயதை காண்கிறார்கள்.

## 2. கருணைக் கண்

**“கருணைக்கண்ணன் ஆசிர்வதிக்கப்படுவான். அவன் தன் ஆகாரத்தில் தரித்திரனுக்கு கொடுக்கிறான்”.** நீதிமொழிகள் 22:9

மகாராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்தவர் சிந்து சாப்கல் (70). சிந்து சாப்கலை அவரது கணவர் சில ஆண்டுகளுக்கு முன்பு வீட்டை விட்டு துரத்தி விட்டார். மனம் தளராத சாப்கல் சாலைகளில் தினமும் பிச்சை எடுத்தார். பிச்சை எடுத்த காசை தனது சுய தேவைகளுக்காக பயன்படுத்தாமல் தன்னைப் போன்று யாரும் அனாதைகளாகி விடக் கூடாது என்று ரோட்டில் திரிந்த அனாதை குழந்தைகளுக்குக் கொடுத்து



உதவ ஆரம்பித்தார். நான்கு ஆசிரமங்களை உருவாக்கி 300 அனாதைக் குழந்தைகள் மகிழ்ச்சியாக வாழ வழி செய்தார். சிந்து சாப்கலின் மனிதாபிமானமிக்க சேவையை பாராட்டி நேரு சித்கன்ட் கேந்திர டிரஸ்ட், “சத்பால் மித்தல்” என்ற தேசிய விருதையும் 2 இலட்ச ரூபாயையும் வழங்கியுள்ளது.

திருமறைப் பகுதியில் சாலமோன் கருணைக்கண்ணன் ஆசீர்வதிக்கப்படுவான், என்கிறார், ஏனெனில் அவர் தனது தயாள பண்பினால் தனக்கு இருப்பதையும் மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கிறான் என்று குறிப்பிடுகிறார். எழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் என்று திருமறை கூறுகிறது. அதிகமாய் இருந்தால்தான் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதல்ல, இருக்கிறவைகளில் மன நிறைவுடனிருந்து மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுதல் சிறப்பானது. நான் உனக்கு இரங்கினது போல நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்க வேண்டாமோ? என்று இறையரசைக் குறித்த உவமையில் இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிறார். இன்று அநேக ஆசீர்வாதங்களை பெற்றிருந்தும் பிறரிடத்தில் இரக்கம் காட்டுவதில் தயக்கம் காட்டுகிறோம். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம், கிறிஸ்து நம்மேல் கொண்ட தயவுக்குத்தக்கதாய் பிறரிடத்தில் தயவு காட்டி கருணைக்கண் உடையவர்களாய் வாழ அர்பணிப்போம். கருணை உள்ளம் கொண்டோர் வாழ்வு தரும் பார்வை கொண்ட கடவுளைக் காண்பர்.

**- V. G. மஹிழா ஜெங்கின்ராஜ்**

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் Mrs. Aspin Bejo அவர்களின் தகப்பனார் Rev. K. Mariyadas (Rtd. ECI Pastor) அவர்கள் டிசம்பர் மாதம் 19-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். அவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ ஜனவரி 2021

| | | |
|---|---|---|
| 01-01-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Committee Member |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Committee Member |
| 08-01-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Saja Arun |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Santhosh |
| 15-01-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sarah Rajasingh |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Selvamoni |
| 22-01-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sathya Priya Ramesh |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. I. Simson |
| 29-01-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Selva Angel Mohan Babu |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. C. Sujin |
| 05-02-2021 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sheeba Sujith |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Sujith Gladson |

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 07-01-2021 | வியாழன்–இரவு ஜெபப்கூடுகை<br>இணையம் வழி நேரலை / நேரம்: இரவு9 மணி முதல் |
| 08-01-2021 | வெள்ளி ஆராதனை<br>இணையம் வழி நேரலை / நேரம்: மாலை 5 மணி முதல் |
| 15-01-2021 | வெள்ளி ஆராதனை<br>இணையம் வழி நேரலை / நேரம்: மாலை 5 மணி முதல் |
| 22-01-2021 | வெள்ளி ஆராதனை<br>இணையம் வழி நேரலை / நேரம்: மாலை 5 மணி முதல் |
| 29-01-202 | வெள்ளி ஆராதனை<br>இணையம் வழி நேரலை / நேரம்: மாலை 5 மணி முதல் |
| 01-02-2021 | திங்கள் - அருணோதய ஆராதனை<br>இணையம் வழி நேரலை/நேரம்: அதிகாலை 5 மணி முதல் |

## ஜனவரி 2021 மாத கேள்விகள்
### (எபிரெயர்)

1. சகல விவாதத்திற்கும் முடிவு எது?
2. இரத்தஞ்சிந்துததில்லாமல் எது உண்டாகாது?
3. மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவன் யார்?
4. வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போன மகா பிரதான ஆசாரியர் யார்?
5. உதடுகளின் கனி எது?
6. தேவராஜ்யத்தின் செங்கோல் எப்படிபட்டதாயிருக்கிறது?
7. பெலவீனமுள்ள மனுஷர்களைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது எது?
8. வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெற எது வேண்டும்?
9. தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாய் இருந்தவன் யார்?
10. மகா பரிசுத்த ஸ்தலமெனப்பட்ட கூடாரம் எங்கு இருந்தது?
11. மரணத்துக்கு அதிகாரி யார்?
12. கனமான ஊழியத்திற்கு யாரால் அழைப்புபெற வேண்டும்?
13. எதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்க வேண்டும்?
14. ஜீவனும் வல்லமையும் உள்ளதாய் இருக்கிறது எது?
15. இரண்டாம் கூடாரத்திலே வருஷத்திற்கு ஒரு தரம் பிரவேசிப்பது யார்?
16. பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறவர் யார்?
17. கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பவன் யார்?
18. கிருபையினாலே எது ஸ்திரப்படுகிறது நல்லது?
19. மெல்கிசேதேக்கு என்பதன் பொருள் என்ன?
20. முன்னோர்கள் எதனால் நற்சாட்சி பெற்றார்கள்?

## ஜனவரி 2021 மாத கேள்விகள்

## (பிரசங்கி 1 முதல் 12 வரை)

1. யாருடைய நித்திரை இன்பமாயிருக்கும்?
2. ஞானியையும் பைத்தியக்காரனாக்குவது எது?
3. தான் சுற்றின இடத்துக்கே திரும்பவும் வருவது எது?
4. தூற்றுக்கோல்கள் போல இருப்பது எது?
5. தேவன் தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவனுக்கு எதை அளிக்கிறார்?
6. விதையை எப்போது விதைக்க வேண்டும்?
7. தேவாலயத்துக்குப் போகும்போது எதை காத்துக்கொள்ள வேண்டும்?
8. பொல்லாத காரியத்தில் எவ்வாறு நிற்கக்கூடாது?
9. தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் எதை மனுஷன் கண்டுபிடியான்?
10. பெரிய குற்றங்களையும் அமர்த்திப்போடுவது எது?
11. தொல்லையின் திரட்சியினால் பிறப்பது எது?
12. யுத்த ஆயுதங்களைப் பார்க்கிலும் நலமானது எது?
13. நோவுபெருத்தவன் யார்?
14. கைகளின் நெகிழ்வினாலே ஒழுக்காவது எது?
15. பரிமளதைலத்தைப்பார்க்கிலும் நல்லது எது?
16. யார் பணத்தினால் திருப்தியடைவதில்லை?
17. சந்தோஷத்துக்கென்று செய்யப்படுவது எது?
18. மனுஷன் எதற்காக பிரயாசப்படுகிறான்?
19. சீக்கிரமாய் அறாதது எது?
20. முகதுக்கத்தினாலே எது சீர்ப்படும்?

# May God Bless All

## Birthday Celebrants – January 2021

| | |
|---|---|
| 04th January | Master. Akash David Mehandro, S/o Mr. Baskar |
| 06th January | Mr. Victor Thayasingh |
| 06th January | Miss. Agnes Yarona, D/o Mr. Kanagavel |
| 06th January | Mrs. Monisha, W/o Mr. Jerry Jones |
| 11th January | Miss. P. Gardeina Eve, D/o Mr. Prem Vijins |
| 12th January | Mr. R. Saju |
| 13th January | Miss. Angelin Pius Justa, D/o Mr. Vinolin Vetha Kumar |
| 15th January | Miss. Jessie Chandra, D/o Mr. Kasiraja |
| 18th January | Master. D. Jason, S/o Mr. Dinakaran |
| 19th January | Mr. Jean C. R. Shibin |
| 19th January | Miss. Jayna Giftlin, D/o Mr. Bensam |
| 21st January | Mr. T. Gnana Ruban |
| 23rd January | Mrs. Binita, W/o Mr. Pratheesh |
| 26th January | Miss. Jevisha, D/o Mr. Jino John |
| 26th January | Miss. B. A. Braelyn Jo, D/o Mr. Bejo Nelson |
| 26th January | Mr. M. Sheeken Paulk |
| 27th January | Miss. Sujimol, D/o Mrs. Susamma |
| 29th January | Mrs. Sujithra, W/o Mr. T. Raju |
| 29th January | Master. Mishael Vinobha, S/o Mr. Vinobha |
| 29th January | Master. Wesley J. Bose, S/o Mr. Jose Chandra Bose |
| 31st January | Miss. Karen Edward, D/o Mr. Edward Sam |
| 31st January | Mr. P. Lenin |

## Wedding Anniversary Celebrants – January 2021

| | |
|---|---|
| 04th January | Mr. Jerry Sathya & Mrs. Sapthekha |
| 04th January | Mr. Nalam Dimalson & Mrs. Sara Angelin Sathiya |
| 07th January | Mr. Vinobha & Mrs. Sumimol |
| 11th January | Mr. Nethaji Jacob Durai & Mrs. Diana Angel |
| 15th January | Mr. Ajin & Mrs. Berlin Sony |
| 18th January | Mr. Prem Vijins & Mrs. Shakina |
| 19th January | Mr. C. Sujin & Mrs. Gracilin Melba |
| 30th January | Mr. Pushpakaran & Mrs. Nirmala |
| 30th January | Mr. Ahigen Paul & Mrs. Pavithra |

# ஜெபிக்க சில குறிப்புகள்

## திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. போதகருக்காக, குடும்பத்துக்காக, போதகர் விசாவுக்காக, உடல் ஆரோக்கியம், ஊழிய ஆற்றல், உற்சாகமான திருப்பணிகளுக்காக ஜெபிப்போம்.

2. சபை கமிட்டி அங்கத்தினர்களுக்காக, குடும்பத்துக்காக, அவர்கள் பங்களிப்புக்காக, பொறுப்பான ஊழிய செயல்பாடுகளுக்காக ஜெபிப்போம்.

3. அனைத்து கிளை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.
   - ஓய்வுநாள் பள்ளி
   - பெண்கள் ஐக்கிய சங்கம்
   - ஆண்கள் ஐக்கிய சங்கம்
   - பாடகர் குழு
   - ஜெபக் குழு

   அனைத்து பொறுப்பாளர்கள், பங்காளர்கள், பங்களிப்புகள், உற்சாகமான செயல்பாடுகள் அதன் ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

4. திருச்சபையின் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். ஊழியத் தேவைகள் தடையின்றி இறைமக்களால் சந்திக்கப்பட, இறை ஊழியங்களின் தடைகள் நீங்க பாரத்தோடு ஜெபிப்போம்.

5. **இந்த புதிய வருடத்தில் திருச்சபை திறக்கப்படவும், திருச்சபை ஆராதனைகளில் ஆண்டவர் பிரசன்னம் அனைவரும் உணரப்படவும், திருச்சபையில் எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.**

6. திருச்சபையில் ஒற்றுமையாய் செயல்படுவதன்மூலம் உருவாகும் இறை ஆசி அனைவரும் பெற்றுக்கொள்ளவும், அனைத்து இறைமக்களும் உண்மையான இறைவார்த்தையை உணரவும், எல்லாத் தடைகளையும் தாண்டி ஒருமைப்பாடு ஏற்படுவதன் மூலம் திருச்சபை இன்னும் கட்டி எழுப்பப்படவேண்டும் என பாரத்தோடும் ஜெபிப்போம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. நமது திருச்சபையால் தாங்கப்பட்டுவரும் 11 மிஷனெரிகளுக்காக, அவர்கள் குடும்பங்களுக்காகவும், அவர்கள் பாதுகாப்பிற்காகவும், நல்வாழ்வுக்காகவும் ஜெபிப்போம்.
2. மிஷனெரிகளின் பணித்தளங்களுக்காக, பணித்தளத்தில் செய்யப்படும் ஊழியங்களுக்காக, ஊழியக்களத்தில் அநேக ஆத்துமாக்கள் அறுவடைச் செய்யப்பட மன்றாடுவோம்.
3. மலை நாடுகளில் செய்யப்படும் திருப்பணிகளுக்காக, வடநாடுகளில் நற்செய்தி பணி செய்வோருக்காக, ஆண்டவரை அறியாத முரட்டாட்டமான மக்கள் மத்தியில் இறைபணி செய்வோருக்காக மன்றாடுவோம்.
4. பணித்தளங்களின் தேவைகள் அரசாலும், நிறுவனங்களாலும், மக்களாலும் தாங்கப்பட ஜெபிப்போம்.
5. மக்களின் மனமாற்றத்திற்காகவும், இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டு மனந்திரும்ப பாரத்தோடு வேண்டுதல் செய்வோம். எதிர்ப்புகள் மாறவும், எதிராளிகள் மனந்திரும்பவும், எழுப்புதல் உண்டாகவும் மன்றாடுவோம்.

## ஓமான் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. ஓமான் தேசத்திற்காக, தேசத்தின் ராஜாவுக்காக, தேசத்தின் மக்களுக்காக, தேசத்தின் ஷேமத்திற்காக ஜெபிப்போம்.
2. பொருளாதார வீழ்ச்சியிலிருந்து விடுபட்டு மக்கள் வேலைவாய்ப்புகள் பெருகவும், நிறுவனங்கள் சிறப்பாய் செயல்படவும், பாதிப்புகள் மாறவும் மக்கள் வாழ்வாதாரங்கள் பெருகவும் மன்றாடுவோம்.
3. பணியாளர் குறைப்பு, ஊதிய குறைப்பு, பணிநேர குறைப்பு போன்றவை மாற்றமடைந்து பொருளாதார செழிப்பு ஏற்பட்டு மக்கள் வாழ்வு ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.
4. கொடிய வியாதிகள், கொடிய விபத்துக்கள், புதிய சட்டத்திட்டங்கள், தேசத்தின் மாற்றங்கள் வாழ்வு தேடி வந்துள்ள மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாதபடி மக்கள் அனைவரும் இறைபாதுகாப்பு பெற்றுக்கொள்ள வேண்டுதல் செய்வோம்.

5. தேசத்தின் காலநிலை மாற்றங்கள், சூழ்நிலை மாற்றங்கள் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாதபடி இறைஅன்பை உணர மன்றாடுவோம்.

## இந்திய தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. சுதந்திரம் பெற்று 74-ம் ஆண்டை சந்திக்கும் நாட்களில் அரசியலில், சமூகத்தில், சமயத்தில், வாழ்வில், குடும்பங்களில் உண்மையான சுதந்திரம் உருவாக ஜெபிப்போம்.

2. அனைத்து தலைவர்களுக்காக, அதிகாரிகளுக்காக, ஆட்சியாளர்களுக்காக, பணியாளர்களுக்காக, மன்றாடுவோம். அனைவரும் சேவை மனப்பான்மையோடு தங்கள் பணிகளை மேற்க்கொள்ள ஜெபிப்போம்.

3. மது, லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை, விபத்துக்கள், தற்கொலைகள், கடத்தல்கள் தேசத்தைவிட்டு நீங்கவும், மக்கள் சமாதானமாக வாழவும் மன்றாடுவோம்.

4. பொருளாதார வீழ்ச்சி, வேலையின்மை, கடன்பிரச்சனை, கொடிய வியாதிகள், இயற்கையின் அழிவுகளிலிருந்து தேசம் காக்கப்படும்படியாய் வேண்டுதல் செய்வோம்.

5. பாகிஸ்தான், சீனா, நேபாள எல்லைப்பகுதிகளின் பாதுகாப்புக்காகவும், எல்லை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்காகவும் மன்றாடுவோம். நாடுகளுக்கிடையே நல்லிணக்கம் ஏற்பட்டு சமாதானத்தின் தேசமாய் இந்திய தேசம் திகழ ஜெபிப்போம்.

## குடும்பத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

1. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்பங்களின் நல்வாழ்வுக்காகவும், குடும்பங்களின் பாதுகாப்புக்காகவும், குடும்பங்களின் ஆசீர்வாதத்துக்காகவும் ஜெபிப்போம்.

2. கடன்பிரச்சனை, வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, வறுமை நிலை, இல்லக் கட்டுமான பணி தோய்வு, சம்பள இழப்புகள், விசா பிரச்சனைகள், வழக்குகள் நீங்கும்படியாய் ஜெபிப்போம்.

3. சிறுபிள்ளைகள் காக்கப்படவும், வாலிப பிள்ளைகள் கல்விக்காகவும், உயர்கல்வி, திருமணம், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொள்ளவும் கடவுள் பயத்தோடும், இறை ஆசியோடும் வாழ மன்றாடுவோம்.

4. வாழ்க்கைத்துணை, குடும்ப அங்கத்தினர்கள், சகோதர, சகோதரிகள், பெற்றோர், பிள்ளைகள் நல்வாழ்வு பெறவும், குடும்பமாய் இறை நாமத்தை மகிமைப்படுத்தவும் மன்றாடுவோம்.

5. குழந்தை வேண்டியிருப்போர், குழந்தை பேற்றிற்காக காத்திருப்போர், நெடுந்தூரம் பயணப்படுவோர், கடினமான பணிகளைச் செய்வோர், தனிமையிலிருப்போர், வியாதியிலிருப்போர், சிறையிருப்பிலுள்ளோர் விடுதலையையும், இறை ஆற்றலையும் பெற்றுக்கொள்ள மன்றாடுவோம்.

## சிறப்பு இறைவேண்டல்

அன்புடையீர்,

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் மிகப்பெரியத் துன்பம் கொரோனா என்னும் வைரஸ் மற்றும உருமாற்றம் அடைந்த கொரோனா வைரஸ். இந்தக் கொடியக் கொள்ளைநோய் பலரின் வாழ்வை அழித்துள்ள நிலையில், உலகமே இந்த வைரஸின் துன்பத்தை எண்ணி அச்சமுடன் உள்ளது. இந்தத் துன்பம் அடியோடு அகலவும் மக்கள் அமைதியுடனும், நலமுடன் வாழவும் அனைவரும் தங்கள் இல்லங்களில் குடும்பமாகக் கூடி உபவாசத்துடன் இறைவேண்டல் செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**இறைவேண்டல் குறிப்புகள்:-**

1. கொரோனா மற்றும் உருமாறிய கொரோனா வைரஸின் வீரியம் செயல் இழந்து முழுமையாக அழிக்கப்படவும்.....
2. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோர் முழுமையான விடுதலை பெறவும்.....
3. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த பயம் அகன்றிடவும்......
4. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் பரவாமலிருக்கவும், அதற்கு மக்கள் முழுமையான ஆதரவு கொடுக்கவும்......
5. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய் குறித்த விழிப்புணர்வுகள், முயற்சிகள் முழுமையான பலனைத் தரவும்......

6. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோயால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவிலிருந்து நாடுகள் மீண்டுவரவும்......
7. கொரோனா என்னும் கொடிய வைரஸ் நோய்க்கு எதிராக அரசு மேற்க்கொள்ளும் முயற்சிகள் வாய்க்கவும்......
8. மருத்துவமனையில் பணிசெய்கிற ஊழியர்களுக்காகவும் (Doctors, Nurses மற்றும் அனைத்து உதவி பணியாளர்களுக்காகவும்) மற்றும் சுகாதர துறையில் பணிசெய்கிற அனைத்து பணியாளர்களுக்காகவும்...
9. இந்தியா தேசத்திலும் நாம் வாழுகின்ற ஓமான் தேசத்திலும் இந்த வைரஸ் வேகமாக பரவிவருகிறது. அதன் வீரியம் குறைந்து தேசத்தின் அனைத்து மக்களும் பாதுகாக்கப்படவும்....

குடும்பமாக வீட்டில் இருக்கிற நாட்களில் கர்த்தரை அதிகமாக தேடவும், தேவ சமாதானம் குடும்பத்தை ஆளுகை செய்யவும்....

**இணைந்து மன்றாடுவோம்! இனிய வாழ்வு பெறுவோம்!!**

## அனுதின மன்னா – ஜனவரி 2021

அன்பர்களே! கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

மேலும் ஒரு புதிய ஆண்டைக்காண கர்த்தர் நமக்கு கிருபை செய்திருக்கிறார். இந்த 2020-வது ஆண்டில் இதுவரை திருமறையை ஒருமுறையாவது முழுமையாய் வாசிக்காதவர்கள் உண்டென்றால் அதை வாசிக்க ஆவல்கொள்ளுங்கள். அதற்கான திருமறைப்பகுதி இந்த மாதத்திலிருந்து தரப்படுகிறது. திருமறையை முழுவதுமாக ஒரு முறையாவது வாசிப்பது நமது மனதுக்கு மகிழ்வைத் தரும்.

தினமும் திருமறை வாசிக்கும் பழக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? இல்லையேல் இன்றே வாசிக்க தீர்மானம் எடுங்கள். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் அவரது வார்த்தையினால் போஷித்து உங்களை ஆசீர்வதிப்பாராக. திருமறைப்பகுதியை வாசித்து குடும்ப ஜெபத்தில் தனி ஜெபத்தில் தியானித்து ஓராண்டில் பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| **ஜனவரி 1** | **வெள்ளி** | **எசே. 36:8-11** | **எசே. 36:9** | **ஆதி. 1-3 அதி.** |
| ஜனவரி 2 | சனி | ஆதி. 26:12-29 | ஆதி. 26:29 | ஆதி. 4-7 |
| ஜனவரி 3 | ஞாயிறு | யாத். 6:1-8 | யாத். 6:5 | ஆதி. 8-11 |
| ஜனவரி 4 | திங்கள் | ஆதி. 17:1-8 | ஆதி. 17:7 | ஆதி. 12-16 |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜனவரி 5 | செவ்வாய் | எபிரெயர் 1:1-12 | எபிரெயர் 1:2 | ஆதி. 17-19 |
| ஜனவரி 6 | புதன் | லூக்கா 2:25-33 | லூக்கா 2:32 | ஆதி. 20-22 |
| ஜனவரி 7 | வியாழன் | 2கொரி. 12:1-9 | 2கொரி. 12:5 | ஆதி. 23-25 |
| **ஜனவரி 8** | **வெள்ளி** | **கலா. 1:11-20** | **கலா. 1:12** | **ஆதி. 26-28** |
| ஜனவரி 9 | சனி | எபே. 1:15-23 | எபே. 1:19 | ஆதி. 29-31 |
| ஜனவரி 10 | ஞாயிறு | எபே. 3:1-12 | எபே. 3:7 | ஆதி. 32-33 |
| ஜனவரி 11 | திங்கள் | வெளி. 1:1-8 | வெளி. 1:7 | ஆதி. 34-36 |
| ஜனவரி 12 | செவ்வாய் | 1கொரி. 3:16-23 | 1கொரி. 3:20 | ஆதி. 37-39 |
| ஜனவரி 13 | புதன் | 2நாளா. 6:1-6 | 2நாளா. 6:2 | ஆதி. 40-42 |
| ஜனவரி 14 | வியாழன் | ஆதி. 9:8-17 | ஆதி. 9:17 | ஆதி. 43-45 |
| **ஜனவரி 15** | **வெள்ளி** | **எபே. 2:19-22** | **எபே. 2:22** | **ஆதி. 46-47** |
| ஜனவரி 16 | சனி | மத்தேயு 8:18-20 | மத்தேயு 8:19 | ஆதி. 48-50 |
| ஜனவரி 17 | ஞாயிறு | யோவான் 2:13-22 | யோவான் 2:21 | யாத். 1-4 |
| ஜனவரி 18 | திங்கள் | சங்கீதம் 133 | சங்கீதம் 133:1 | யாத். 5-7 |
| ஜனவரி 19 | செவ்வாய் | பிரசங்கி 4:9-12 | பிரசங்கி 4:12 | யாத். 8-10 |
| ஜனவரி 20 | புதன் | மாற்கு 3:31-35 | மாற்கு 3:35 | யாத். 11-13 |
| ஜனவரி 21 | வியாழன் | மத்தேயு 5:21-26 | மத்தேயு 5:24 | யாத். 14-16 |
| **ஜனவரி 22** | **வெள்ளி** | **எபே. 2:13-18** | **எபே. 2:4** | **யாத். 17-20** |
| ஜனவரி 23 | சனி | பிலி. 2:1-4 | பிலி. 2:2 | யாத். 21-23 |
| ஜனவரி 24 | ஞாயிறு | கலா. 6:1-4 | கலா. 6:2 | யாத். 24-27 |
| ஜனவரி 25 | திங்கள் | நெகே. 2:11-18 | நெகே. 2:17 | யாத். 28-30 |
| ஜனவரி 26 | செவ்வாய் | 2பேதுரு 1:1-7 | 2பேதுரு 1:7 | யாத். 31-34 |
| ஜனவரி 27 | புதன் | அப். 17:16-27 | அப் 17:23 | யாத். 35-37 |
| ஜனவரி 28 | வியாழன் | 1தெச. 5:4-11 | 1தெச. 5:11 | யாத். 38-40 |
| **ஜனவரி 29** | **வெள்ளி** | **எபே. 4:25-32** | **எபே. 4:29** | **லேவி. 1-4** |
| ஜனவரி 30 | சனி | 1தீமோ. 6:1-8 | 1தீமோ. 6:6 | லேவி. 5-7 |
| ஜனவரி 31 | ஞாயிறு | ரோமர் 14:13-23 | ரோமர் 14:19 | லேவி. 8-11 |
| பிப்ரவரி 1 | திங்கள் | லூக்கா 8:26-39 | லூக்கா 8:35 | லேவி. 12-14 |
| பிப்ரவரி 2 | செவ்வாய் | யோவான் 17:1-10 | யோவான் 17:7 | லேவி. 15-17 |
| பிப்ரவரி 3 | புதன் | அப். 10:34-43 | அப். 10:36 | லேவி. 18-20 |
| பிப்ரவரி 4 | வியாழன் | ரோமர் 5:1-11 | ரோமர் 5:5 | லேவி. 21-23 |
| **பிப்ரவரி 4** | **வெள்ளி** | **1கொரி. 3:9-15** | **1கொரி. 3:9** | **லேவி. 24-25** |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**

**Land Line : 2470 5784**

**E-mail : csitco@gmail.com**

**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**